சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO. **27 / 2018**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி **14.11.2024** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : கார்த்திகேயன் | கிராமம் : |
| த/பெ : | வட்டம் : |
| மதம் : | தொழில்: |
| ஜாதி : | வயது : |

முதல் விசாரணை

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ-1. குற்ற பத்திரிக்கை சான்றிட்ட நகல் - ம.சா.ஆ-2. TN 47 AC 7932 என்ற எண்ணுள்ள வாகனத்தின் MIV report சான்றிட்ட நகல் - ம.சா.ஆ-3. காயச் சான்று சான்றிட்ட நகல் - ம.சா.ஆ-4. விபத்து பதிவேடு சான்றிட்ட நகல் - ம.சா.ஆ-5. விடுவிப்பு சான்றிதழ் (29.03.2016 முதல் 11.04.2016) அசல் ம.சா.ஆ-6. விடுவிப்பு சான்றிதழ் (28.04.2016 முதல் 09.05.2016) வரை அசல் - ம.சா.ஆ-7. ஓட்டுநர் உரிமம் நகல் - ம.சா.ஆ.8 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை

விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றேன். எனது இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு உள்ளது . அந்த காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் மனு குறைபாடு உடையது என்றால் சரியல்ல. எனக்கு முன்னால் நின்றுக்கொண்டிருந்த வாகனத்தின் கார் கதவை திறக்கும் போது இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் பொறுமையாகவும் கவனமாகவும் மெதுவாகவும் வாகனத்தி ஓட்டிச்சென்றிருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. நான் மெதுவாக தான் வாகனத்தை ஓட்டிச்சென்றேன். எனது ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயம் அது பூரணமாக குணமாகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல. எனது வயது, தொழில், வருமானம் ஆகியவற்றை நிரூபிக்ககூடிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் எனக்கு காயம் பட்டதால் எனக்கு இழப்பீடு கிடைக்கவேண்டுமென்றால் ஜு யபுரம் போலீசார் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

எனக்கு மேற்படி விபத்தினால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. என்னை மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டபோது நல்ல நிலைமையில் தான் விடுவிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழுகாரணம் எனது அதிவேகமும் எனது அஜாக்கிரதையும் தான் காரணம் என்றால் சரியல்ல. இழப்பீடு கிடைக்ககூடியது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமென்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

(ஒம்/- ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.